பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
The EELA NADU

மலர் 19 கார்த்திகை 24 ஜுமாதுல் 27 இதழ் 299
யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 9-12-77

## காணி அமைச்சர் கிளப்பிய உரிமைப்பிரச்னை

(கொழும்பு)

தேசியஅரசுப்பேரவையில் காணி, விவசாய அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயகா நேற்றுப் பேசுகையில், முன்னைய அரசாங்கம் பற்றிய அதிர்ச்சிதரக்கூடிய பல விஷயங்கள் விரைவில் விசாரணைக் கமிஷன் முன்னிலையில் அம்பலமாகும் என்று குறிப்பிட்டார்!

முன்னாள் பிரதமரும் அவரது மக்களும் நடத்திய உல்லாசபுரி ஆட்சிபற்றிய திடுக்கிடும் தகவல்களை மக்கள் விரைவில் அறிந்துகொள்ளலாம் என்றார் காணி விவசாய அமைச்சர்.

அத்தனகல எம். பி. திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்காவின் ஒரு அறிக்கை சம்பந்தமாக காணி, விவசாயஅமைச்சர் பேசுகையில் கூறியதாவது:

### உரிமைப். பிரச்னை

''காணி விற்பனையில் நடைபெற்ற மோசடி சம்பந்தமாக கடந்த மாதம் 30-ம் திகதி நான் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா பற்றி இப் பேரவையில் பேசியபோது அதற்குப் பதிலளிக்க அத்தனகல எம். பிக்கு அவகாசமிருந்தது. ஆனல் அவர் அப்படிச்செய்யாமல், ஸ்ரீ ல. சு. கட்சியின் பத்திரிகையான 'தினகர'வில் திருமதி சிறிமா பண்டாரநாயக்கா அறிக்கை வெளியிட்டுள்ளார். இது தேசிய அரசுப் பேரவையின் உரிமையை மீறுகிறது. சபையில் தெரிவிக்கப்பட்ட கருத்துக்களுக்கு சபையிலேயே பதிலளிக்காமல், சபைக்கு வெளியே சென்று பத்திரிகையில் அறிக்கை வெளியிடலாமா? சபையில் நான் பொய்யான தகவல்களை வெளியிட்டதாக அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது என்னை அவமதிப்பதாக உள்ளது. வியாங்கொடையில் உள்ள ஒரு காணியை திருமதி சிறிமாவும் அவரது இரண்டு பிள்ளைகளும் 2 லட்சத்து 47,000 ரூபாவுக்கு விற்பனை செய்துள்ளனர். இதே காணியின் ஒரு பகுதியை ரூபா 2,85,000வுக்கு விற்றுள்ளனர். இவையாவும் காணிச் சீர்

6-ம் பக்கம் பார்க்க)



# கருணாநிதி விடுதலை!

## 'பழிவாங்கும் நோக்குடன் கைதானேன்'

சென்னை, டிச 8

திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர், கலைஞர் மு. கருணாநிதி இன்று காலை விடுதலை செய்யப்பட்டார்.

இவருடன் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டிருந்த ஏனைய தி. மு. க. த் தலைவர்களும் இன்று விடுதலை செய்யப்பட்டனர்.

கடந்த அக்டோபர் மாதம் 30ந் திகதி, முன்னாள் இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி சென்னைக்கு விஜயஞ் செய்வதை ஆட்சேபித்து தி. மு. கழகத்தினர் கறுப்புக் கொடி ஆர்ப்பாட்டம் நடத்தியதைத் தொடர்ந்து கலைஞரும், தி மு. கழகத்தின் முக்கிய தலைவர்களும் கைதுசெய்யப்பட்டுக் காவலில் வைக்கப்பட்டனர்.

தி. மு. க தலைவர்களை இன்று காலை விடுதலைசெய்த சென்னை மெற்ருே பொலிடன் மாஜிஸ்திரேட்: குற்றப் பத்திரிகை தாக்கல்செய்யப்பட்ட பின்னர் நீதிமன்றத்தில் ஆஜராக வேண்டுமென்று கட்டளை பிறப்பிக்கப்பட்டால் அவ்வாறு ஆஜராகவேண்டும் என்று கேட்டுக்கொண்டார்.

38 தினங்களுக்குப் பின்னர் இன்று விடுதலைசெய்யப்பட்ட தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி இன்று காலை பத்திரிகை நிருபர்களிடம் பேசுகையில்; அரசியல் பழிவாங்கும் நோக்கத்துடனேயே தாம் கைது செய்யப்பட்டதாகவும், சிறையில் அடைக்கப்பட்டதாகவும் கூறினார்.

தமிழ்நாட்டில் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மக்களையும், பகுதிகளையும் ஒரிரு தினங்களில் சென்று பார்ப்பதாகக் கூறிய கலைஞர், நாளை [9ந் திகதி] நடைபெறவிருந்த உத்தேசப் போராட்டம் தற்காலிகமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளதென்று அறிவித்தார்.

[கலைஞரும் ஏனைய தி. மு. க. தலைவர்களும் இன்று விடுதலை செய்யப்படாவிட்டால், 9ந் திகதி தமிழ்நாட்டில் பெருமளவில் போராட்டம் ஒன்று நடைபெறுமென்று தி. மு. க. தலைமைப்பீடம் ஏற்கனவே அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.]

நிலைமை இவ்வாறிருக்க, முன்னாள் முதலமைச்சர் மு. கருணாநிதிக்கு எதிராக ஆறு குற்றச்சாட்டுக்கள் சம்பந்தமான சர்க்காரிய விசாரணைக் கமிஷன் கண்டுபிடிப்புகளை மத்திய அரசு, தமிழ்நாடு அரசுக்கு அனுப்பிவைத்துள்ளது! இது பற்றி இந்திய ராஜ்யசபையில் இன்று தகவல் வெளியிட்ட உள்துறை அமைச்சர், நடவடிக்கைகளை மேற்கொள்ளும் பொருட்டே கமிஷன் கண்டுபிடிப்புகள் தமிழ் அரசுக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளன என்று தெரிவித்தார்.

ஒப்பந்த அடிப்படையில் விமானம் மூலமாக மருந்து தெளித்தது சம்பந்தமான குற்றச்சாட்டு விபரங்கள், மத்திய புலனாய்வுத் துறையினருக்கு அனுப்பப்பட்டுள்ளன என்றும் அமைச்சர் தெரிவித்தார்.

### முன்னைய ஆட்சியில் நிகழ்ந்த

# ஊழல் மோசடிகள்

## விரைவில் அம்பலமாகும்!

### பேரவையில் 'ரொனி' அறிவிப்பு

[கொழும்பு]

கடந்த அரசாங்கத்தின் பதவிக் காலத்தில் நடைபெற்ற ஊழல்கள், மோசடிகள் மற்றும் அதிர்ச்சித் தகவல்கள் விரைவில் அம்பலமாகுமென்று நிதி, திட்டமிடல் அமைச்சர் திரு. ரொனி டி மெல் நேற்றுத் தேசிய அரசுப் பேரவையில் தெரிவித்தார்.

நிதி, திட்டமிடல் அமைச்சின் மீதான குழுநிலை விவாதத்திற்குப் பதிலளித்துப் பேசிய அமைச்சர் திரு. ரொனி டி மெல் பல திடுக்கிடும் தகவல்களை நேற்று வெளியிட்டார்.

### லட்சக்கணக்கில் சம்பாதிப்பு

''இரத்தினக்கல் கூட்டுத்தாபனம், லங்கா சமசமாஜக் கட்சியின் ஒரு இரத்தினக்கல் சுரங்கமாக விளங்கியது. லங்கா சமசமாஜக் கட்சி எம். பிக்கள் பல லட்சக்கணக்கான ரூபாவைச் சம்பாதித்துவிட்டனர். இவர்களின் ஆட்சி முடிந்ததும் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியினர் ஆளத் தொடங்கினர். திருமதி லக்ஷ்மி பண்டாரநாயக்கா, சுனேத்ரா பண்டாரநாயக்கா, சந்திரிகா பண்டாரநாயக்கா ஆகியோர், அரச பதவிகளை வகித்துக்கொண்டு, இரத்தினக்கல் வியாபாரத்திலும் ஈடுபட்டனர். அலரி மாளிகையே, ஒரு இரத்தினக்கல் வியாபார நிலையமாக மாற்றப்பட்டது!'' என்று கூறிய திரு ரொனி டி மெல்;

### ஆணைக்குழு விசாரணை நடத்தும்

''முன்னைய அரசின் நடவடிக்கைகள் பற்றி விரைவில் ஒரு ஆணைக்குழு விசாரணை நடத்தும். இதில் எல்லா ஊழல்களும், மோசடிகளும் அம்பலமாகும்'' என்று கூறினார்

''தாசா முதலாளிக்கு முன்னைய அரசாங்கம் பெரும் சலுகைகளை வழங்கியிருக்கிறது பிணைச் சான்றிதழ்கள் இல்லாமலேயே இரண்டு கோடி ரூபா கடனை அரசாங்கம் வழங்கியிருக்கிறது'' என்றும் அமைச்சர் ரொனி டி மெல் தெரிவித்தார்.

### 70 கோடி ரூபா நஷ்டம்

இரத்தினபுரி எம். பி. திரு. புஞ்சி நிலமே முன்னர் விவாதத்தில் பேசுகையில்; லங்கா சமசமாஜக் கட்சியினரால் தான் இரத்தினக்கல் கூட்டுத்தாபனம் இயங்கியதென்றும், முப்பது உறவினர்களால் நிர்வகிக்கப்பட்ட இந்தக் கூட்டுத்தாபனம் மூலமாக அரசுக்கு எழுபது கோடி ரூபா நஷ்டம் ஏற்பட்டதென்றும் கூறினர்.

(6-ம் பக்கம் பார்க்க)

### கதிர்காமம்

## இராமகிருஷ்ண மடம் விவகாரம்.

(கொழும்பு)

தேசியஅரசுப்பேரவையில் நேற்று நீதிஅமைச்சு மீதான ஒதுக்கீடு பற்றிய குழுநிலை விவாதத்தில் நல்லூர் எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் பேசுகையில், கதிர்காமத்திலுள்ள

(6-ம் பக்கம் பார்க்க)

### மல்லியில் கொள்ளை லாபம்:

# யாழ். வர்த்தகருக்கு ரூ. 2,500 அபராதம்

(வண்ணார்பண்ணை)

கொத்தமல்லியின் விலையைக் கூட்டி விற்ற வர்த்தகர் ஒருவருக்கு 2500 ரூபா அபராதம் விதிக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் நீதிபதி திரு கே. வி நவரத்தினம் முன்னிலையில் இவ் வழக்கு விசாரணை செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் ஆஸ்பத்திரி வீதியிலுள்ள பிரபல வர்த்தகர் ஒருவர், ஒரு றுத்தல் மல்லியை விலைகூட்டி விற்றதாக இவ் வழக்கில் குற்றம்சாட்டப்பட்டிருந்தது. உணவுப்பொருள்களை விலைகூட்டி விற்பவர்களையோ உணவுப்பொருட்கள் மீது கலப்படம்செய்பவர்களையோ, எந்தவகையிலும் மன்னிக்கமுடியாது என்று தீர்ப்பளிக்கையில், நீதிபதி கூறினார். (க-அ)

## சிங்களதேர்ச்சியின்மைக்காக வேலைநீக்க அறிவித்தல்

[யாழ்ப்பாணம்]

சிங்களதேர்ச்சியின்மை காரணமாக, யாழ்ப்பாணம் வவுனியா, மன்னார் மாவட்டங்களைச் சேர்ந்த பல தமிழ் விவசாய விஸ்தரிப்பு சேவையாளருக்கு வேலைநீக்க அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

சிங்களத்தேர்ச்சி பெறுவதற்குக் காலஎல்லை குறிப்பிடப்பட்டும், சிலருக்குத் தவணை நீடிப்பு வழங்கப்பட்டும், அவர்

(6ம் பக்கம் பார்க்க)

# புத்தூர் வங்கிக் கொள்ளை:

## நகைகளுக்கு நஷ்டஈடு

(நெல்லியடி)

புத்தூர் மக்கள்வங்கியில் நடந்த கொள்ளையின்போது நகைகளை இழந்த 294 பேருக்கு நஷ்டஈடு வழங்கப்படவிருக்கிறது.

புத்தூர் வங்கிக்கொள்ளையின் போது சுமார் 5 லட்சம் ரூபா பெறுமதியான நகைகள் கொள்ளையடிக்கப்பட்டன.

ஒரு தங்கப்பவுணுக்கு 665 ரூபா விதம் நஷ்டஈடு வழங்கப்படவிருப்பதாகவும் இம்மாதம் 12-ம் திகதி முதல் நஷ்டஈடு வழங்கும்வேலை ஆரம்பமாகும் என்றும் தெரியவருகிறது.

நஷ்டஈடு வழங்குவதற்கான அறிவித்தல் கடிதங்கள் புத்தூர் மக்கள்வங்கியினுல் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன. (க-அ)

## வரிவிளம்பரம்

### தேவை

கண்ணாடித் தொழிற்சாலைக்கு அனுபவமுள்ளவர்களும், வேலை பழகுபவர்களும் (Trainees) உடனடியாகத் தேவை. வேலை பழகுபவர்களுக்கு ஜனவரி மாதத்திலிருந்து நாளொன்றிற்கு ரூபா 6/- வரையில் சம்பளமாகக் கொடுக்கப்படும். நீர்வேலிக்கு கிட்டடியில் உள்ளவர்கள் விரும்பத்தக்கது, சேவி கிளாஸ் அன்ட் மெட்டல் வேக்ஸ், நீர்வேலி. 7790

தமிழில் கணக்கு எழுதுவதிலும், ஆங்கிலம், ஆங்கில, தட்டெழுத்தில் தேர்ச்சியுள்ள ஒரு பெண்ணும், பிடவை வியாபார அனுபவமுள்ள ஆண், பெண் இருபாலாரும் தேவை காலை 9-06 முதல் 11-00 வரையில் நேரில் வரவும். விபரங்களுக்கு! க. நாகமுத்து அன் சன்ஸ், 48—50, பெரிய கடை, யாழ்ப்பாணம். 7862

அனுபவமிக்க லேத்வேலை, பிற்றிங் வேலை தெரிந்த வேலையாள் தேவை. நேரில் வரவும். இன்டஸ்றியல் வேக்ஸ், பருத்தித்துறை 7870

### விற்பனைக்கு

நீமியா உரம். மண்ணைவளம்படுத்தி அதிக விளைவைப் பெற்று பயிர்களைப் பாதுகாத்துக்கொள்ள 'நீமியா' உரத்தை வாங்கிப் பாவியுங்கள். 10 ருத்தல் கொண்ட பைக்கட் ஒன்றின் விலை ரூபா 6/- மட்டுமே. தயாரித்து விநியோகிப்போர்: மில்க்வைற் சவர்க்காரத்தொழிலகம், த.பெ. 77, யாழ்ப்பாணம். 7864

### CLASSES

I. C. M. A. (A & B) may-1978 Chartered Preliminary. commencing 10 & 17, Dec. 1-30 P. m. Jaffna Education Centre, 22, Ramiah Chettriar Lane; Hospital Road, Jaffna. 7868

## விளம்பரம்

### வழங்குநர்களை பதிவு செய்தல்

### நல்லூர் கிராமசபை

வழங்குநர்களைப் பதிவு செய்வது சம்பந்தமாகவுள்ள முழு விபரங்களுக்கும் 24-11-77ம் திகதிய டெயிலி நியூஸ் புதினப் பத்திரிகையைப் பார்க்கவும். மேலதிக விபரங்களை கிராம சபை காரியாலயத்தில் கந்தோர் நேரத்தில் அறிந்து கொள்ளலாம்.

[ஒப்பம்]

ந. அமுதசாகரன்,
விசேட ஆணையாளர்,
நல்லூர் கிராமாட்சி மன்றம்
யாழ்ப்பாணம்.

1-12-77 7878

### உயிர்மாய்த்தார் மூதாட்டி

(யாழ்ப்பாணம்)

நீண்டகாலமாக நோயினால் வேதனைப்பட்டுவந்த மூதாட்டியொருவர் பரவைக் குளத்தில் குதித்து தற்கொலைசெய்து கொண்டார்.

திருநெல்வேலியைச் சேர்ந்த வேலன் முத்துப்பிள்ளையின் [வயது 65] மரணவிசாரணையில் மேற்கண்ட தகவல் தெரிவிக்கப்பட்டது.

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு எஸ். கனகரத்தினம் மரணவிசாரணை நடத்தினார்.

விசாரணை முடிவில் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. [உ]

### ஹதீஸ்மஜ்லிஸ்

[யாழ்ப்பாணம்]

இஸ்லாமிய புத்தாண்டை முன்னிட்டு இம்மாதம் 12ம் திகதி இரவு யாழ். சின்னப் பள்ளிவாசல் முன்றலில் ஹதீஜ்மஜ்லிஸ் நடைபெறவிருக்கிறது. இப்பள்ளிவாசலின் இளைஞர் இயக்கத்தால் நடத்தப்படும் இவ்வைபவத்தில் நாச்சிக்குடா கதீப் ஜும்மா பள்ளிவாசல் மௌலவி எஸ். சதகத்துல்லா பிரதம பேச்சாளராகக் கலந்து கொள்வார். [அ]

# செய்திச் சுருக்கம்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைச் சேர்ந்த கம்பஹா எம்.பி. திரு. எஸ். டி. பண்டாரநாயக்காவுக்கு எதிரான தேர்தல் ஆட்சேபனை மனு செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யப்பட்டது.

### இன்று சதுர்த்தி

[கொழும்பு]

கொழும்பு கதிரேசன் வீதியில் உள்ள யாழ்ப்பாணத்தார் கதிரவேலாயுத சுவாமி கோவில் இலக்ஷ அர்ச்சனை இன்று 9-ம் திகதி பூர்த்தி அடைகிறது. இக் கோவில் குருக்கள் சிவஸ்ரீ பரமசாமி புங்குடுதீவு கணேசராசக் குருக்கள் கந்தரோடை சே. சிவபாலசர்மா குரு கொட்டாஞ்சேனை பத்திரகாளி கோவில் குரு வி. சிவசுப்பிரமணியக்குரு ந. சபாரத்தினக்குரு ஆகியோர் உட்பட பலர் கலந்து கொள்கின்றனர்.

### மூன்றரை லட்சம் பேர்

[கொழும்பு]

இம்மாதம் 14-ம் திகதி நடைபெறவிருக்கும் ஜி. சி. ஈ. சாதாரணப் பரீட்சைக்கு மூன்றரை இலட்சம் மாணவர்கள் தோற்றுவார்கள். இவர்களில் மூன்று லட்சம் பேர் தனிப்பட்ட பரீட்சார்த்திகள். நாடு முழுவதிலும் உள்ள 2000 பரீட்சை நிலையங்களில் இவர்கள் பரீட்சை எழுதுவார்கள்.

### ஸ்தம்பிதம்

[மன்னார்]

மன்னார் ஆஸ்பத்திரி மருத்துவத் தாதிமார் கடந்த வெள்ளிக்கிழமை திடீர் விடுமுறையில் சென்றதால் ஆஸ்பத்திரி வேலைகள் அனைத்தும் ஸ்தம்பித்தன.

### தொடர்ந்து தீவிரம்

[சங்கானை]

கட்டுப்பாட்டு விலையை மீறி உபஉணவுப் பொருட்களை விற்பனை செய்வோர்மீது சங்கானைப் பொலிசார் தொடர்ந்தும் தீவிர நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

தமக்குக்கிடைத்த தகவலைத் தொடர்ந்துசங்கானைபொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி சப் இன்ஸ்பெக்டர் ஷரத் சில்வா தலைமையில் சென்ற பொலிஸ் கோஷ்டியினர் மூளாயில்தேநீர் கடையொன்றில் பாணை விலைகூட்டி விற்றதாகக் கூறப்படும் நபர் ஒருவரை சந்தேகத்தின் மீது கைதுசெய்துள்ளனர்.

வட்டுக்கோட்டை ருத்தலடியில்கட்டுப்பாட்டுவிலைக்கு 1/48 சதமாக இருந்த மல்லியை ருத்தல் 4-00 ரூபாவாக விற்றதாகக் கூறப்படும் நபர்ஒருவரையும் சந்தேகத்தின்மீது கைது செய்து வழக்குத் தாக்கல் செய்துள்ளனர். (உ)

### நாடகப் போட்டியில் சென்ஹென்றீஸ் முதலிடம்

[இளவாலை]

அண்மையில் கல்வித்திணைக்களத்தால் நடாத்தப்பட்ட பாடசாலைகளுக் கிடையிலான நாடகப்போட்டியில் சிரேஷ்ட பிரிவு இவ்வருடமும் யாழ். மாவட்டத்தில் சென்.ஹென்றீஸ் கல்லூரி முதலாவது இடத்தைத் தட்டிக்கொண்டது. இரண்டாவது இடத்தை மானிப்பாய் மகளிர் கல்லூரியும், 3வது இடத்தை மானிப்பாய் இந்துக்கல்லூரியும் பெற்றுக்கொண்டன. இப்போட்டி கடந்த மாதம் யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெற்றது.

கடந்த ஆண்டு நடத்தப்பட்ட நாடகப்போட்டியிலும் சென்.ஹென்றீஸ் கல்லூரியே முதலிடத்தைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. [ஆ]

### விஞ்ஞானம்

[கொழும்பு]

'விஞ்ஞானம் தான் ஆக்கத்துக்கும் காரணமாக விளங்குகிறது' அழிவிற்கும் அதுதான் காரணமாக அமைகிறது. நாம் அதனை ஆக்கத்துக்காகப் பயன்படுத்துவோம்' என்று கைத்தொழில்அமைச்சர் திரு. சிறில் மத்தியூ கூறினார்.

இலங்கை விஞ்ஞான முன்னேற்றச் சங்கத்தின் 33-வது வருடாந்த மாநாட்டைத் தொடக்கி வைத்துப் பேசுகையிலேயே அவர் இவ்வாறு சொன்னார்.

### 2000 ரூபா அபராதம்

[பாணந்துறை]

கட்டுப்பாட்டு விலையை மீறி ஒரு இறுத்தல் மாட்டிறைச்சியை 4 ரூபா 50 சதத்திற்கு விற்பனை செய்த குற்றத்தின் பேரில் பாணந்துறையைச் சேர்ந்த கசாப்புக்கடை காரர் ஒருவருக்கு பாணந்துறை நீதிபதி 2000 ரூபா அபராதம் விதித்தார்.

### உத்தரவு

[கொழும்பு]

இவ்வருட முடிவிற்குள் சகல பாடசாலைகளிலும் பெற்றோர் ஆசிரியர் சங்கங்களை அமைத்துவிட வேண்டும் என்று கல்வி அமைச்சு உத்தரவிட்டுள்ளது.

### 'வாபஸ்பெறுக'

[கொழும்பு]

அரிசி, சீனி மான்யத்தை ரத்துச் செய்யும் வரவு செலவுத் திட்ட யோசனையை உடனடியாக வாபஸ் பெறவேண்டுமென அரசாங்க லிகிதர் சேவைச் சங்கம் கோரவுள்ளது.

இது தொடர்பான சுற்றறிக்கை ஒன்றை சங்கம் அதன் சகல கிளைகளுக்கும் அனுப்பி வைத்துள்ளது.

### விஜேவீர தாக்கு

(மாத்தறை)

'இந்நாட்டில் உள்ள இடதுசாரி தலைவர்கள் அனைவரும் பொது மக்களின் நலனுக்காக உழைக்கவில்லை' என்று ஜனதா விமுக்திப் பெரமுனைத் தலைவர் திரு. ரோஹன் விஜேவீர மாத்தறையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டம் ஒன்றில் பேசுகையில் கூறினார்.

### மீண்டும் ஆரம்பம்

[யாழ்ப்பாணம்]

வன் செயல் சம்பவத்தையடுத்து நிறுத்தி வைக்கப்பட்டிருந்த பருத்தித்துறை-திருக்கோணமலை பஸ்சேவை மீண்டும் இம்மாதம் 10-ம் திகதி முதல் ஆரம்பமாகிறது.

### சுட்டுக்கொலை

[காலி]

மாமனாரை மருமகன் துப்பாக்கியால் சுட்டுக் கொலை செய்ததாகக் கூறப்படும் சம்பவம் ஒன்று ஹிக்கடுவ பொலிஸ் பகுதியில் நடைபெற்றுள்ளது.

### கப்பலில் களவு

[திருக்கோணமலை]

திருக்கோணமலைத் துறைமுகத்தில் தரித்து நிற்கும் வெளிநாட்டுக் கப்பல் ஒன்றின் இயந்திரத்தின் முக்கிய பாகங்கள் திருடப்பட்டுள்ளதாக பொலிசாரிடம் புகார் செய்யப்பட்டுள்ளது.

### இலங்கை விஜயம்

[கொழும்பு]

வளரும் நாடுகளில் நகர வழக்கு வகுத்தல் துறையில் உலக வல்லுநர்களில் ஒருவராகக் கருதப்படும் பேராசிரியர் வுட்டோ கூனுக்ஸ்பேர்கர் இலங்கை வந்துள்ளார்.

### முக்கொலை

[சிலாபம்]

ஒரே குடும்பத்தைச் சேர்ந்த அண்ணன், தம்பிகளான மூவர் துப்பாக்கியால் சுடப்பட்டும் பொல்லுகளால் தாக்கப்பட்டும் கொலை செய்யப்பட்டுள்ளனர்.

### தமிழருக்கு இடமில்லை

[கம்பளை]

கம்பளைப் பகுதியில் பெரும்பாலான இ. போ. ச. பஸ்களின் பெயர்ப் பலகைகளில் தமிழுக்கு இடமளிக்கப்படவில்லை என்று புகார் செய்யப்படுகிறது. [உ]

### ரூ. 28 ஆயிரம் கடன் கிடைக்கும்

[எழுதுமட்டுவாள்]

எழுதுமட்டுவாள் ஸ்ரீலங்கா விவசாய விரிவாக்கக் கூட்டுறவுப்பண்ணைக்கு, காலபோக உணவு உற்பத்திக்கு இலங்கை வங்கி 28 ஆயிரம் ரூபா கடன் வழங்க முன்வந்துள்ளது.

இக்கூட்டுறவுப்பண்ணையில், கோழிப்பண்ணை பாற்பண்ணை பழஉற்பத்தி, மிளகாய், வெங்காயம் உற்பத்தி செய்வும்

[5-ம் பக்கம் பார்க்க]

## கோட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோட்டில்

வழக்கு இல: ஈடு 117.

1. இரத்தினம் பரமதாசனும் பெண்
2. மனோன்மணிதேவியும், கொக்குவில் கிழக்கு கொக்குவில் அவர்களின் தத்துவக்காரன் மூலம்
3. செல்லப்பா மாணிக்கம்-கொக்குவில் கிழக்கு

வழக்காளிகள்

எதிராக

1. அப்பையா பத்மநாதன் கைம்பெண் இராசேஸ்வரி, பலாலிறோட் கொக்குவில் கிழக்கு

எதிராளி

MB 117ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக்காணியை 1977ம் ஆண்டு மார்கழி மாதம் 29ம் திகதி வியாழக்கிழமை (29-12-77) முற்பகல் 10-30 மணிக்கு அந்தக் காணிக்குள் நின்று என்னால் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல்வட்டி ரூபாய் 6600/- இன்னும் ரூபாய் 6000/-க்கு வருடம் ஒன்றுக்கு நூற்றுக்கு 10/-வட்டியும், வழக்கு அனைத்த திகதியாகிய 1976ம் ஆண்டு வைகாசி 21ம் திகதியிலிருந்து தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும் வரை வட்டியும், வழக்குச் செலவு ரூபாய் 494/45 சதம் 19-5-77ல் இத்தொகையில் ரூபாய் 4000/- கொடுக்கப்பட்டிருக்கிறது.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக், நல்லூர் கோவிற்பற்று கொக்குவில் கிழக்கு இறை ''பழையகுடியிருப்பு'' பரப்பு நில இலா 8, குளி ½ இது 1909ம் ஆண்டு ஆவணி மாதம் 30ம் திகதி சேவையர் த. கந்தையா அவர்களால் தயாரிக்கப்பட்ட 4610ம் இலக்கப் படத்தின்படி பர. நில. இல. 8. இதில் வடக்குப் பக்கமாக பர. நில. இல, 2. குளி 4. 3. இது மேற்சொல்லிய படத்தில் 1ம் துண்டு இதற்கு எல்லை கிழக்கு 2ம் துண்டாகக் காட்டப்படும் புதிதாக வைக்கப்பட்ட 12 அடி அகலப்பாதை வடக்கு இக் காணிக்கும் மறு காணிக்காகவும் விடப்பட்ட இதற்குரியதாகப் பாவிக்கப்பட்டுவரும் ஒழுங்கை மேற்கு யே. எஸ் செல்வரத்தினத்திலுதனம். தெற்கு நாகலிங்கம் தம்பியையாவுக்கும் பெண் இராசம்மாவுக்குமுரிய 3ம் துண்டு ஆதனம். இதடங்கலும். மேற்சொல்லிய 2ம் துண்டுப் பாதையிலிதற்குரிய பங்கும்.

ப. நா. தருமலிங்கம்,
கொமிசனரும் விலைமதிப்பாளரும்.

167/1, கோவில் வீதி,
நல்லூர்
2-12-77. 7876

## ஈட்டு விற்பனவு விளம்பரம்

யாழ்ப்பாண மாவட்ட நீதிமன்றத்தில்

வழ: இல. ஈடு / 315

நம். 23, யாழ்வீதி யாழ்ப்பாணம், செல்லையா இராசதுரை

வாதி

எதிராக

ஆனந்தவடலி றோட், அரியாலை

1. மாணிக்கம் ஐயனும் பெண்
2. பாக்கியமும்.

பிரதி வாதிகள்

ஈடு/ 315ம் இலக்க வழக்கில் சம்பந்தப்பட்ட கீழ்க்காணும் ஆதனம் 1978ம் வருடம் ஜனவரி மாதம் 5ம் திகதி [5-1-78] வியாழக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் அவ்வாதனத்துள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

### தீர்வைத் தொகை

முதல் வட்டி: ரூபா 4937/- மேலும் இதில் 2500/- ரூபாவுக்கு 2-11-76 தொடக்கம் 13-6-77 வரை வருட மொன்றுக்கு 18% வீத வட்டியும் அதன்பின் சேர்ந்த முழுத் தொகைக்கும் இறுக்கும்வரை வருடமொன்றுக்கு நூற்றுக்கு 9% வீத வட்டியும் வழக்குச் செலவு ரூபா 527/45 மற்றும் விற்பனவுக்குரிய செலவுகளும்.

### ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வண்ணார்பண்ணைக் கோவிற்பற்று வண்ணார்பண்ணை தென்கிழக்கு இறை 'பனங்காடு' நிலப்பரப்பு லாச்சம் ½ அரையும் வீடும் கிணறும் வழிவாய்க்காலும் இதற்கு எல்லை கிழக்கு வெங்கடராமன் செட்டி செல்லையா செட்டிக்கும் பெண் நாகரத்தினத்துக்கும் உரிய ஆதனம். வடக்கு ஒழுங்கை, மேற்கு புகையிரதப் பாதையும், தெற்கு வெங்கடேசன் கோவிலுக்குரிய ஆதனமும் இதில் சொரியலாய் ¾ பங்கு.

சி. மகாதேவன்,
நீதிமன்ற விற்பனை ஆணையாளர்
ஏல விற்பனவாளர்.

553, காங்கேசன் துறை வீதி.
யாழ்ப்பாணம்.

7873

# ‘ஷா’ கமிஷன் விசாரணையை அல்ல நடைமுறையையே எதிர்க்கிறோம்

## எதிர்க்கட்சித்தலைவர் சவான் கருத்து

புதுடில்லி, டிச. 8

‘ஷா’ கமிஷனின் நடைமுறைகளையே காங்கிரஸ்கட்சி எதிர்க்கிறது. கமிஷன் விசாரணையை அல்ல.

இவ்வாறு லோகசபை எதிர்க்கட்சித் தலைவர் திரு. வை. பி. சவான் கூறியுள்ளார்.

‘ஷா’ கமிஷன்முன் ஆஜராக வேண்டாம் என்று காங்கிரஸ் கட்சி தனது உறுப்பினர்களுக்கு பணிப்புரை பற்றி காங்கிரஸ் ஆட்சிமன்றக்குழு நேற்று ஆராய்ந்தபோது திரு. சவான் மேற்கண்டவாறு கருத்துத் தெரிவித்துள்ளார்.

‘ஷா’ கமிஷன்முன்னிலையில் ஆஜராவதில்லை என முடிவு செய்வதற்கு முன்னர் சட்ட நிபுணர் கமிட்டி ஒன்றிடம் ஆலோசனை செய்திருக்கவேண்டும் என்று பல எம். பி.க்கள் கருத்துத்துத் தெரிவித்துள்ளனர். (இ)

### அதிசயம் ஆனால் உண்மை

# 37 ஆண்டுகளுக்கு மேல் வாடாதிருந்த வெற்றிலைகள்!

கோலாலம்பூர், டிச. 8

37ஆண்டுகளுக்கு மேலாக வாடாமல்கருகாமல் எவ்வித மாற்றமுமின்றி இருந்த வெற்றிலைகள் சில மலேஷியாவில் உள்ள கோவில் ஒன்றில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கோலாலம்பூரில் உள்ள இலங்கைச் சைவர்களுக்குச் சொந்தமான கந்தசாமி கோவிலிலேயே இந்த அதிசய வெற்றிலைகள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளன.

அண்மையில் திருத்த வேலைகளை மேற்கொள்வதற்காக இக்கோவிலில் உள்ள விக்கிரகங்கள் இருந்த இடத்திலிருந்து அகற்றப்பட்டு வேறு இடங்களில் வைக்கப்பட்டன.

அப்போது சண்டேஸ்வரர் விக்கிரகத்தின் அடியில் இருந்த யந்திரங்களுடன் இந்த வெற்றிலைகள் காணப்பட்டன.

இந்த வெற்றிலைகள் பச்சைத்தன்மை மாறாமல் இப்பொழுதுதான் வெற்றிலைக் கொடியிலிருந்து கொய்யப்பட்ட வெற்றிலைகள் போல் காட்சி அளித்தன.

1940ம் ஆண்டு குறிப்பிட்ட சண்டேஸ்வரர் விக்கிரகம் அக்கோவிலில் வைக்கப்பட்டபோது விக்கிரகத்திற்குஅடியில் இவ்வெற்றிலைகள் யந்திரங்களுடன் வைக்கப்பட்டதாம்.

ஒரு லட்சம் டாலர் செலவில் இக்கோவில புனருத்தாரண வேலைகள் மேற்கொண்டுவரும் சிற்பிகள் சுமார் 3மணித்தியாலமுயற்சியின்பின் இவ்விக்கிரகத்தை பெயர்த்தனர்.

அப்போதேஇவ்வெற்றிலைகள் கண்டுபிடிக்கப்பட்டன.

இந்த அற்புதம் தெய்வ அனுக்கிரகத்தினால் ஏற்பட்டதென்றும் இதுநாட்டுக்கும் மக்களுக்கும் நல்ல சகுனம் என்றும் மலேஷிய மக்கள் நம்புகின்றனர்.

இதைக் கேள்வியுற்ற பொதுமக்கள் இந்த அதிசய வெற்றிலையைக்காண கோவிலில் பெருந்திரளாகக் கூடினர். (இ)

## புயல், வெள்ள நிவாரண நிதி 1 கோடி 11 லட்சம்

புதுடில்லி, டிச. 8

இந்தியப் பிரதமர் திரு. மொரார்ஜி தேசாயின் தென்னிந்திய புயல், வெள்ள நிவாரண நிதிக்கு இதுவரை ஒரு கோடியே 11 லட்சம் ரூபா கிடைத்துள்ளது என்று புதுடில்லியிலிருந்து அறிவிக்கப்பட்டது. (இ)

## ராஜினாமா கோரிக்கை

புதுடில்லி, டிச. 8

கர்நாடக முதல் மந்திரி திரு. தேவராஜ் அர்ஸை பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யுமாறு 63 காங்கிரஸ் சட்ட சபை உறுப்பினர்கள் கோரியுள்ளனர்.

திரு. தேவராஜ் அர்ஸுக்கும் காங்கிரஸ் தலைமைப்பீடத்திற்கும் இடையே அண்மையில் எழுந்த கருத்து வேறுபாடுகளை அடுத்தே இந்தக் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக 4 சட்ட சபை உறுப்பினர்கள் காங்கிரஸ் தலைவர் திரு. பிரம்மானந்தரெட்டிக்கு அவசரத் தந்தி ஒன்றை அடித்துள்ளனர். (இ)

## 81 கோடி ரூபா ஒதுக்கீடு

புதுடில்லி, டிச. 8

இந்தியாவில் வெள்ளத் தடுப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள நடப்பு ஆண்டில் 81 கோடி ரூபாவை மத்திய அரசு ஒதுக்கியுள்ளது. (இ)

## சுவீப் முடிவுகள்

(கொழும்பு)

நேற்று முன்தினம் அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட 641-வது தேசிய சுவீப் முடிவுகள் வருமாறு:

1-வது பரிசு:

**57 L 0782**

ரூபா 1,00,000

2-வது பரிசு:

**22 T 0622**

ரூபா 40,000

3-வது பரிசு:

**24 X 0097**

ரூபா 10,000

தலா 1,500 ரூபா பரிசு பெறும் நூறு ஆறுதல் பரிசுகள் விபரம் வருமாறு:

| | |
|---|---|
| 46 A 0569 | 52 A 0380 |
| 60 A 0446 | 37 B 0907 |
| 12 C 0182 | 24 C 0601 |
| 34 C 0452 | 35 C 0634 |
| 43 C 0231 | 53 C 0191 |
| 59 C 0430 | 14 D 0485 |
| 28 D 0201 | 47 D 0053 |
| 32 E 0443 | 37 E 0853 |
| 43 E 0235 | 50 F 0268 |
| 52 F 0143 | 27 G 0292 |
| 44 G 0221 | 52 G 0347 |
| 34 H 0914 | 39 H 0058 |
| 19 J 0180 | 31 J 0637 |
| 33 K 0275 | 53 K 0281 |
| 05 L 0698 | 10 L 0794 |
| 25 L 0989 | 26 L 0518 |
| 52 L 0791 | 57 L 0495 |
| 11 M 0282 | 14 M 0096 |
| 57 M 0998 | 01 N 0965 |
| 19 N 0853 | 39 N 0067 |
| 54 N 0495 | 38 O 0084 |
| 48 O 0594 | 55 O 0344 |
| 03 P 0562 | 16 P 0275 |
| 55 P 0219 | 60 P 0289 |
| 17 Q 0596 | 24 Q 0897 |
| 36 Q 0016 | 48 Q 0527 |

(5-ம் பக்கம் பார்க்க)

# “எம். ஜி. ஆரின் பிடிவாதம் விபரீதம் விளைவிக்கும்”

சென்னை, டிச. 8

‘கலைஞர்கருணாநிதி மீதும்கழகத் தலைவர்கள் மீதும் புனையப்பட்ட பொய்வழக்குகள் நீதிக்கு எதிராகச் சுமத்தப்பட்ட வழக்காகும். ஐந்துவாரங்கள் எந்தவித முகாந்திரமும் இல்லாமல் தலைவர்களை, மாநில அரசு காவலில்வைத்துள்ளது. மாநில முதல்வர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கு நீண்ட அவகாசம் தந்துள்ளோம். அவர்நாட்டின் சூழ்நிலையைக் கருதி, தனது எதிர்காலத்தை எண்ணிப்பார்த்து நல்லமுடிவை எடுக்கவேண்டும்.’

இவ்வாறு கலைஞரையும், ஏனைய கழகத்தவர்களையும் விடுதலை செய்யுமாறு சென்னையில் நடைபெற்ற கண்டனக் கூட்டத்தில், தி. மு. க. கொள்கை பரப்புச் செயலாளர் திரு. செ. கந்தப்பன் கூறினார்.

திரு. செ. கந்தப்பன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:

‘முதல்வர் எம். ஜி. ஆரிடம் உள்ள கெட்டகுணம் பிடிவாதம் என்பதையும் நான் அறிவேன். பிடிவாதத்தின் முடிவு எப்படி அமையுமென்பதையும் நான் தெரிந்திருக்கின்றேன்;

‘இன்று திரு. கருணாநிதி மீதும் கழகத் தலைவர்கள் மீதும் தொடுக்கப்பட்டுள்ள வழக்கு

(5ம் கலம் பார்க்க)



யாழ்ப்பாண மாவட்ட நெசவு தொழிலாளர் கூட்டுறவுச்சங்கத்தின் கோண்டாவில் மின்தறித் தொழிற்சாலையின் இரண்டாம் பிரிவு வேலையை யாழ்ப்பாணம் எம். பி. திரு. வெற்றிவேலுயோகேஸ்வரன் யந்திரத்தின் பொத்தானை அழுத்தி ஆரம்பித்துவைக்கிறார். சங்கத் தலைவரும், நெசவுப் பொருட்கள் விநியோக பிரதேச இயக்குநரும் யாழ். மாவட்ட சிறுகைத்தொழில் அத்தியட்சகருமான திரு. எஸ் விஸ்வலிங்கமும் படத்தில் காணப்படுகிறார்.

### “துப்பாக்கி அபகரிப்பு — கொள்ளைகள்:

# விசாரணை நடத்தி கோர்ட்டில் ஆஜராக விசேட பொலிஸ்குழு வேண்டும்”

## மல்லாகம் நீதிபதி வலியுறுத்து

(யாழ்ப்பாணம்)

‘வடபகுதியில் நிகழ்ந்துள்ள துப்பாக்கி அபகரிப்பு, வங்கிக் கொள்ளைகள், தொடர்பான விசாரணையின் பொருட்டு நீதிமன்றங்களில் ஆஜராகி நிலைமையை எடுத்துரைப்பதற்கு என்று தனியானதொரு பொலிஸ்குழு நியமிக்கப்பட வேண்டும்.’

இவ்வாறு மல்லாகம் மாவட்ட நீதிபதி திரு. எம். டி. ஜேசுரட்ணம் வடபகுதிக்குப் பொறுப்பான உதவிபொலிஸ் மா அதிபரிடமும் வடபகுதி பொலிஸ் சுப்ரீண்டன்டிடமும் வலியுறுத்தியுள்ளார்.

மல்லாகம் நீதிமன்றப்பிரிவில் நடைபெற்ற துப்பாக்கி அபகரிப்புகள் தொடர்பான வழக்கு விசாரணையின்போதே நீதிபதி இவ்வலியுறுத்தலை எஸ். பி.க்கும், டி. ஐ. ஜி.க்கும் தனித்தனிப் பிரதியாக அனுப்பி வைக்குமாறு உத்தரவு பிறப்பித்தார்.

இதில் நீதிபதி கூறியிருப்பதாவது: ‘இவ்வகையான சம்பவங்கள் பாரதூரமானவை. இவ்வழக்குகள் நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்படும்போது பிராஸிகியூஷன் தரப்பு நிலையை எடுத்து விளக்குவதற்கு பொறுப்புவாய்ந்த ஒரு பொலிஸ் அதிகாரி பிரஸிகியூஷன் தரப்பில் இருப்பதையே எந்தப் பிரஜையும் விரும்பும் நிலை உண்டு. இந்த வகையில் இவ்விதமான வழக்குகளில் விசாரணை புரிந்து நீதிமன்றங்களில் ஆஜராவதற்கு என்று வடபகுதியில் தனியான பொலிஸ்குழு ஒன்று நியமிக்கப்படவேண்டியது இன்றியமையாதது. இதன் மூலம் வழக்குகளின் விசாரணையில் ஏற்படும் தாமதமும் தவிர்க்கப்படும்.’ (உ)

# உரும்பராய் கொள்ளை: இன்று தொகுப்புரை

(பண்டத்தரிப்பு)

உரும்பராய் துப்பாக்கிக் கொள்ளை வழக்கின் தொகுப்புரை இன்று மல்லாகம் நீதிமன்றத்தில் நடைபெறும் இவ்வழக்கில் உரும்பராயைச் சேர்ந்த செல்லையா நடராஜா என்பவரின் வீட்டுக்குத் துப்பாக்கியுடன் சென்று அவரைக் கொலைசெய்வதாகப் பயமுறுத்திவிட்டு அவரிடமிருந்த துப்பாக்கியை அபகரித்துச் சென்றதாக பொன்னுத்துரை வசந்தகுமார், சுந்தரலிங்கம் நகுலேஸ்வரன் ஆகிய இருவர் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருந்தது.

நேற்று முன்தினம் செல்லையா நடராசா குறுக்குவிசாரணை செய்யப்பட்டார்.

எதிரிகள் சார்பில் சட்டத்தரணிகள் சிவா பாலேந்திரா, மு. திருநாவுக்கரசு, கே. சீவரத்தினம் ஆகியோர் ஆஜரானினர். [இ]

## கல்லூரியில் கிறிஸ்மஸ் விழா

[திருநெல்வேலி]

கிறிஸ்மஸ் விழா யாழ். பல்தொழில் நுட்பக்கல்லூரி மண்டபத்தில் கிறிஸ்தவ மாணவ மன்றத்தால் கொண்டாடப்பட்டது. பிரதம பேச்சாளராக வண. பிதா சிங்கராயர்அடிகள் கிறிஸ்துவின் பிறப்பும் இன்றைய சமூகமும் என்னும் விஷயம் பற்றி பேசினார்.

இதைத் தொடர்ந்து விழாவுக்குத்தலைமை வகித்த செல்வன் செ.யோசப் மரியநாயகம் பேசுகையில், ஆசிரியர்களினதும் இந்து மாணவர்களினதும் ஒத்துழைப்பு இருப்பதினால் இம்மன்றம் மேன்மேலும் வளர்ச்சி அடைந்து வருடாவருடம் கிறிஸ்மஸ் விழா சிறப்பாக நடைபெறுவதாகக் கூறினார்.

உபஅதிபர் எஸ். இராசேந்திரா, செல்வி எஸ். வின்சிலோ ஆகியோரும் பேசினர். கலை நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. [அ]

## எம். ஜி. ஆர்.

[2ம் கலத் தொடர்ச்சி)

புனையப்பட்ட பொய் வழக்காகும். இதன் காரணமாக நீதித்துறையில் வைத்துள்ள நம்பிக்கையை மக்கள் இழந்துவருகின்றனர்.

‘தொடர்ந்தும்இந்நிலை நீடிக்குமானால் கழகத்தின் தலைமை செயற்குழு முடிவுக்கமைய இம்மாதம் 9ம் திகதி நடைபெற உள்ள போராட்டம் கலைஞர் விடுதலையாகும்வரை தொடரும். (கெ-இ)

## "ஐ. தே. கட்சி ஆட்சிபீடமேற

# தமிழர்கள் உதவியதே கலவரத்திற்குக் காரணம்"

## பேரவையில் சங்கரியின் உருக்கமான உரை

நாட்டிலே கலவரம் ஏற்படுவதற்கும் பல்லாயிரம் பேர் அகதிகளானதற்கும் உயிர்களையும் உடைமைகளையும் இழந்ததற்கும் காரணம் ஆட்சிபீடம் ஏறுதற்கு ஐ.தே.கட்சிக்கு தமிழ்மக்கள் வாக்களித்ததுதான் என்று பட்ஜட்விவாதத்தின் போது தேசியஅரசுப்பேரவையில் உரை நிகழ்த்திய கிளிநொச்சி எம். பி. திரு. வி. ஆனந்தசங்கரி கூறினர்.

"அகதிகளுக்கு உதவுமுகமாக அமெரிக்கா ஆயிரக்கணக்கான கூடாரங்களை அனுப்பியிருந்தது. கப்பலில்அவற்றை அனுப்பினுல் சுணங்கிவிடுமென்று விசேஷ விமானத்தில் அவற்றை அனுப்பியது. ஆனுல் அவை இன்னும் கிளிநொச்சிக்காணிக்கந்தோரில் அடுக்கிவைக்கப்பட்டுள்ளன" என்று திரு. சங்கரி கூறினர்.

"இந்த நாட்டிலே சிங்கள சமூகத்தைச் சேர்ந்த ஒருவர் தான் பிரதமராக வரக்கூடிய நிலைமை இருக்கிறது. சிங்களவர் ஒருவர்தான் இந்த நாட்டின் ஜனுதிபதியாகவரக்கூடிய நிலைமை இருக்கிறது. காலத்துக்குக்காலம் ஒரு தமிழர் உங்களுக்கு அகப்பட்டு விடுகிறுர். கடந்த ஏழாண்டு காலமாக ஒரு தமிழர் கடந்தஅரசாங்கத்தால் குத்தகைக்குப் பிடிக்கப் பட்டிருந்தார். இப்பொழுது அவர் போக வேருெருவர் வந்திருக்கிறுர். ஆறுஆண்டுகாலத்துக்கு ஒருவர் தப்பித்தவறி 500 அதிகப்படிவாக்குகளோடு உங்களுடன் சேர்ந்துஇருக்கிறுர். தமிழ்அமைச்சராக வந்திருக்கிறுர். கொஞ்சம் தவறியிருந்தால் அந்த ஸ்தானத்தைக் கூட இழந்து முழுக்க முழுக்க இது தமிழர் இல்லாத ஒரு அரசாங்கமாகத்தான் அமைந்துஇருக்கும். குறைபாடுகளை நிவர்த்தி பண்ணிவிட்டு எங்களைப் பார்த்துக்கேளுங்கள் உங்களுடைய கொள்கை இப்ப என்னவென்று நாங்கள் அப்பொழுது எங்கள் கொள்கையைப் பற்றிச்சிந்திப்பேரம்.

### நாளுக்குநாள் அகதிகள் அதிகரிப்பு

எனது உரையைமுடிக்குமுன் ஒரு முக்கியமானவிடயத்தைப் பற்றி இங்கு பேச விரும்புகிறேன். இந்த நாட்டிலே சுபிட்சம் ஏற்பட்டுவிட்டது. சமத்துவம் ஏற்பட்டுவிட்டது; அமைதி ஏற்பட்டு விட்டது, ஆகவே நாடு பெயர்ந்து சென்றவர்கள் எல்லோரும் திரும்ப வாருங்கள் என்று அமைச்சர்கள் இங்கே கூறுகின்றுர்கள். ஆனுல்கிளிநொச்சியில்நாளுக்கு நாள் அகதிகள் வந்துகொண்டிருக்கின்ருர்கள். அவர்கள்வேறு எங்கிருந்தும் வரவில்லை. சிங்களப்பகுதிகளில் இருந்துதான் வருகின்ருர்கள். ஏன் அவர்கள் அப்படி வந்துகொண்டிருக்கின்ருர்கள் என்பதை நீங்கள் சிந்தித்துப்பார்க்கவேண்டும்.

பிரதம அமைச்சரவர்கள் இங்கு இருக்கும் வேளையில் ஒரு குற்றச்சாட்டை நான் சுமத்த விரும்புகிறேன். ஏறக்குறைய 4,000 அகதிகள் கிளிநொச்சி முகாம்களில் இருந்தார்கள். இதைப்போல இரண்டு மூன்று பங்கு அகதிகள் உள்ளூர்களில் வந்து குடியேறினுர்கள், இந்த அரசாங்கத்தை உருவாக்க முழுக்கமுழுக்க ஆதரவு கொடுத்த உத்தமர்கள், இந்த அரசாங்கம் தங்களைப் பாதுகாக்கும் என்ற நம்பிக்கையோடுதங்கள் ஆதரவைக் கொடுத்ததமிழர்கள் யாழ்ப்பாணத்தில் அகதிகளாகக் குடிவந்தநேரம்எந்த அமைச்சராவது வந்து இந்த அகதிகளை அகதிகள் முகாம்களில் பார்வையிட்டார்களா? எந்த அமைச்சராவது அவர்களது குறைகளை வந்துகேட்டார்களா? ஒருவரும் இல்லை. எந்த அமைச்சராவது வந்து அவர்களுக்கு நம்பிக்கையூட்டினுர்களா? இல்லை. 3,800க்கு மேற்பட்டவர்கள் அகதிகளாக ஏறக்குறைய மூன்றுமாதகாலம் கழித்தார்கள்; அவர்கள் பட்டினி போடப்பட்டார்கள். இவர்களுக்கு அரசாங்க ஊழியர்கள் தங்கள்சொந்தப்பணத்தில் செலவுசெய்வதுபோலமிச்சம் பிடித்தார்கள். திசமாருவிலிருந்து 70 குடும்பங்களை அங்குள்ள அரசாங்க ஊழியர்கள் 50ரூபா கொடுத்து கிளிநொச்சிக்கு அனுப்பி வைத்தார்கள். கிளிநொச்சியில் அவர்களுடைய குஞ்சியப்பன்மார் இல்லை, வேறுஉறவினர்இல்லை.

### திஸமாருவிலிருந்து கிளிநொச்சிக்கு அனுப்பினர்

அவர்கள் பட்ட கஷ்டங்களும் இழந்த உயிர்களும், பொருள்களும் கொஞ்சநஞ்சமல்ல. கணவனை இழந்தமனைவிகள், மனைவியை இழந்த கணவன்மார்கள், பெற்ருேரை இழந்த பிள்ளைகள், பிள்ளைகளை இழந்த பெற்ருேர்கள்இப்படிப் பலர் அகதிகளாக வந்து கொண்டிருக்கிருர்கள். பல நாட்கள்காடுகளில், குகைகளில் வசித்து அவர்கள் கிளிநொச்சிக்கு வந்தார்கள், அவர்களை வரவேற்று ஆவனசெய்தோம். அரசாங்கம் ஓரளவுஒத்துழைப்புக் கொடுத்தது; உணவு கொடுத்தது! அதை நாம் மறுக்கவில்லை. இன்றுஇருக்கும் நிலையை உணராமல் சிலர் இன்று நடந்து கொள்கிருர்கள். அகதிகளுக்கு அரசாங்கம் உணவுகொடுத்தாலும் அங்குள்ள உத்தியோகத்தர்கள் அகதிகளுக்கு உணவு கொடுக்க மறுத்தார்கள். அப்போது அகதிகளுக்கு வேண்டிய உணவை கிளிநொச்சியிலுள்ளவர்கள் கொடுத்தார்கள் திசைமாருவிலிருந்து 70 குடும்பங்கள். அவர்களுடைய உணவை கிளிநொச்சி தொகுதியிலுள்ள இளைஞர்களும் மக்களும் சேர்ந்துவழங்கிஞர்கள். திசைமகராமயிலிருந்து 70குடும்பங்கள் அகதிமுகாமிலே பலநாட்கள் இருந்துவிட்டு கிளிநொச்சிக்கு அனுப்பி வைக்கப்பட்டார்கள். திசமகராமயிலிருந்து கிளிநொச்சிக்கு வந்தகுடும்பங்களில் எவருக்கும் கிளிநொச்சியில் உறவினர்கள் இல்லை. அது அவர்களுடைய மூதாதையினருடைய இடமுமல்ல. அவர்களின் சொந்தக்காரர் எவரும் அங்கே இல்லை. இருந்தும்அவர்களை அங்கேஅனுப்பிவைத்தார்கள். ஈவிரக்கமற்ற அரசாங்க அதிகாரிகள் அவர்களுக்கு 50ரூபாபணம் மட்டும்கொடுத்தனுப்பிவைத்தார்கள்.

### அரச அதிகாரிகள் நடத்தை

பத்திரிகைகளில் நாங்கள் பார்த்தோம், எத்தனையோ மக்கள் அள்ளிஅள்ளிக்கொடுத்திருக்கிருர்கள் அகதிகளுடைய புனர்வாழ்வுக்காக என்று, அந்நிய நாடுகள் வாரி வழங்கியிருக்கின்றன அகதிகளுக்குப் புனர்வாழ்வு கொடுங்கள் என்று: ஆனுல், அரசாங்க உத்தியோகத்தர்கள் அதைக் கொடுக்கத் தயாராக இல்லை. 50 ரூபா கொடுத்து இலங்கையின் ஓர் அந்தத்திலே இருந்த 70 குடும்பங்களையும் மறுஅந்தத்துக்கு அனுப்பிவைத்தார்கள். கிளிநொச்சிக்கு வந்த அந்த அகதிகளை அங்கேயுள்ள அரசாங்க உத்தியோகத்தர்கள் வரவேற்கத் தயாராக இல்லை; அவர்களுக்கு இடம் கொடுக்கத் தயாராக இல்லை; சாப்பாடுகொடுக்கத் தயாராக இல்லை. அங்கேயுள்ள மக்கள்தான் அந்தஒழுங்கைச் செய்துகொடுத்தார்கள்; இன்றுவரை அவர்கள் அகதிமுகாமிலே கிளிநொச்சிப்பகுதி மக்களுடைய தயவிலேதான் வாழ்ந்துகொண்டிருக்கிருர்கள் அரசாங்கத்தினுடைய உதவிகள் எதுவும் இல்லாமல்.

### இந்த நிலைமைக்குக் காரணமென்ன?

இந்த நிலைமை இவர்களுக்கு ஏன் ஏற்பட்டது? இந்தத் தேசிய அரசுப்பேரவையிலே சிலநண்பர்கள் சொன்ஞர்கள்- மிகவும் தந்திரமாகச் சொன்ஞர்கள்-நீங்கள் இப்படி அப்படிப் பேசியபடியால்தான் இவர்களுக்கு இந்தக்கதி வந்தது என்று. நீங்கள் தனிநாட்டைக் கோரியபடியாலேதான் இவர்களுக்கு இந்தக்கதி வந்தது என்று சொன்ஞர்கள். இவர்களுக்கு இந்தக்கதி வந்ததற்குக் காரணம் இன்று ஆட்சிபீடத்திலிருக்கும் உங்களை ஆட்சிபீடம் ஏற அவர்கள் உதவியதுதான் என்பதை எல்லோரும் அறிவார்கள். இதை யாரும் மறுக்கமுடியாது. சிங்களப் பகுதிகளில் வாழ்ந்த தமிழ் மக்கள் ஐக்கியதேசியக்கட்சிக்கு வாக்களித்த காரணத்தினுலே தான் அவர்கள் இந்த நிலைமைக்குள்ளாக்கப்பட்டார்கள். மனைவி மக்களை, உற்ருர் உறவினரை மட்டும் அவர்கள் இழக்கவில்லை. மதிக்கமுடியாத கற்பைக்கூட இழந்தபெண்கள் அங்கே வந்திருக்கிருர்கள். இப்படியிருந்தும் இந்தக் கௌரவ சபையின் எந்த அங்கத்தவராவது அவர்களுக்கு ஆறுதல்கூற அங்கே வந்தார்களா? பிரதம அமைச்சர்கூட அவர்களுக்கு ஆறுதல்கூற இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தவில்லை. இது எங்களுக்கு வேதனையளிக்கும் விஷயம்.

### ஆறுதல் கூறினீர்களா?

வெளிநாட்டில் இப்படியொரு சம்பவம் நடந்து விட்டால் அனுதாபச்செய்திகள் அனுப்புகிருர்கள் ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள்; கூட்டங்கள் எல்லாம் வைக்கிருர்கள். இந்த நாட்டிலே பிறந்து, எங்கள் சகோதரர்கள் என்று நீங்கள் கூறிக்கொண்டிருக்கிற இந்த இனத்தவர்களுக்கு ஏற்பட்ட இந்தக் கதிக்கு நீங்கள் யாரும் ஆறுதல் வார்த்தை கூடச் சொல்ல வரவில்லை. இப்பேர்ப்பட்ட நிலைமைக்கு ஆளாக்கப்பட்ட மக்கள் அங்கே வந்தார்கள்; தமிழ் நாட்டைத் தேடித்தான் வந்தார்கள், தமிழ் ஈழத்திலேதான் தங்களுக்கு இடமுண்டு என்று நினைத்து வந்தார்கள். கலவரம் நடந்து ஒருவாரம் பத்து நாட்களுக்குள்ளே அரசாங்கம் கூறத் தொடங்கிவிட்டது நிலைமை சீராகிவிட்டது; நீங்கள் திரும்பிப்போங்கள் என்று. ஆனுல் இன்றும் மக்கள் எனக்கு எழுதிக்கொண்டிருக்கிருர்கள். நிலைமை இன்னமும் சீரடையவில்லை. நாங்கள் இங்கே வாழ முடியாமல் இருக்கிறது; எங்களுக்கு வாழ வழி வகுத்துத் தாருங்கள் என்று. இப்பேர்ப்பட்ட சங்கடமான நிலைமையிலே வந்த மக்களை அங்கே அரசாங்க ஊழியர்கள் நடாத்திய முறை வேதனை கொடுக்கும் விடயம் மாத்திரமல்ல, வெட்கக்கேடான விடயமுமாகும்.

### அமெரிக்காவின் அவசரமும் அகதிகளின் அசிரத்தையும்

இந்த அகதிகளுக்கு இந்த நிலைமை ஏற்பட்டபொழுது இருக்க இடமில்லாமல் இருக்கும் அகதிகளுக்கென ஆயிரக்கணக்கான கூடாரங்களைக் கொடுக்க அமெரிக்கா தயாராக இருந்தது. தயாராக இருந்ததுமட்டுமல்ல, அவற்றைக் கப்பலிலே அனுப்பினுல் காலம் கடந்துவிடும் என்று விசேட விமானத்தை ஒழுங்கு செய்து விமானமூலம் கொண்டுவந்து இறக்கினுர்கள். அந்தக் கூடாரங்களைக் கிளிநொச்சிக்குக் கொண்டுவந்து சேர்த்தார்கள். கிளிநொச்சி காணிக்கந்தோரிலே அந்தக் கூடாரங்கள் அடுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. காணிக் கந்தோருக்கு 200 யாருக்கு அப்பாலுள்ள கிளிநொச்சி புதிய சந்தையிலே 1,800 அகதிகள் தஞ்சம் புகுந்தார்கள். 3,800 அகதிகளுக்கு மேல் கிளிநொச்சியில் இருந்த போதிலும் அந்த ஓர் இடத்தில்மட்டும் 1,200 அகதிகள் சொல்ல முடியாத கஷ்டங்களை அனுபவித்துக்கொண்டு இருந்தார்கள். கட்டடக் கலையில் நிபுணர் என்று வர்ணிக்கப்படுகின்ற திரு செல்லையா குமாரசூரியர் அவர்கள் அமைச்சராக இருந்தபோது கட்டப்பட்டது அந்தச் சந்தை. அந்தச் சந்தையில் ஒரு மனித ஆத்மாகூட மழைநேரம் நனையாமல் இருக்க முடியாது. விரித்த குடை போன்றது அக்கட்டடங்கள். அதில்தான் அகதிகள் இருந்தார்கள். ஆயிரக்கணக்கான பிள்ளைகள் அந்தக் கட்டடங்களில் மழைக் குளிரால் நடுங்கினுர்கள்; மழையால் நனைந்தார்கள். ஆனுல் 200 யாருக்கு அப்பால்தான் பல ஆயிரக்கணக்கான மைல் தூரம் ஆகாய விமானமூலம் அகதிகளுக்கென அமெரிக்காவிலிருந்து வந்து சேர்ந்த கூடாரங்கள் காணிக் கந்தோரில் முடங்கிக் கிடந்தன. 200 யார் கடந்து வந்து அந்தக் கூடாரங்கள் அகதிகளுக்கு உதவ எவரும் தயாராக இல்லை. இதை அமெரிக்கர்கள் கேள்விப்பட்டால் கைகொட்டிச் சிரிப்பார்கள்; ஏளனம் செய்வார்கள்.

### தண்டிக்கவேண்டும்

நான் இதற்காக அரசாங்கத்தைக் குறை கூறவில்லை. இங்கு நாம் ஏதாவது கூறினுல் சபை முதல்வர் உடனே எழுந்து 'உங்களுடைய பிரச்னைகளைக் கூறுங்கள் நாங்கள் தீர்த்துவைக்கிருேம்' என்று கூறுவார்; கூறியிருக்கிருர். அன்று 190 லட்சம் ரூபாக்களை உபமான்யமாக அங்கீகரித்தோம். இந்த உபமான்யம் அகதிகளுக்கானது. அதுபற்றி விவாதம் தேவையில்லை என்ருர்கள். நாங்கள் விவாதம் இல்லாமல் அந்த உபமான்யப் பிரேரணையை நிறைவேற்றிக் கொடுத்தோம். ஆனுல் அங்கே என்ன நடக்கிறது? பிந்தி வந்தவர்களுக்குச் சாப்பாடு இல்லை. காலம் கடந்து வந்தவர்கள் திரும்பிப்போகவேண்டும். ஒரு குறிப்பிட்டவர்களுக்குமட்டும் காணி; மற்றவர்களுக்குக் காணி இல்லை. மகாவலி திட்டத்தின்கீழ் லட்சக்கணக்கான விவசாயிகளுக்கு அரசாங்கம் காணி பகிர இருக்கும் நேரத்திலே பல ஆயிரக்கணக்கானவர்கள் அகதிகளாக வந்திருக்கும் இடத்தில் 200 குடும்பங்களுக்கு மட்டுமே காணி மற்றவர்களுக்கு 350 ரூபா காசைக் கொடுத்து அவர்களை வீதியில்விட அரசாங்க அதிகாரிகள் திட்டம் தீட்டி இருக்கிருர்கள். நடவடிக்கை எடுத்துவருகிருர்கள். இது வெட்கக்கேடான காரியமாகும். இதை நாமோ அரசாங்கமோ அனுமதிக்க முடியாது. இதனுல் வருகின்ற அவமானம், இழிவான பெயர் அரசாங்கத்திற்கேயாகும். இதற்கு யார் பொறுப்பாளி என்று கண்டுபிடித்து அவர்களுக்குத் தண்டனை வழங்கவேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ளுகிறேன். [முற்றும்] (அ)

---

## இவர்களுக்கும் வாழ்வு கிடைத்தது!

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரவீதியில் நாதியற்றுநின்ற 18 பேரைக் கொண்ட 4 தமிழ்க் குடும்பங்களுக்கு அகதிகள் புனர்வாழ்வுச்சபை வாழ்வளித்துள்ளது.

திசமகாராமவிலிருந்து இனக் கலவரத்தின்போது யாழ்ப்பாணம் வந்துசேர்ந்த இக் குடும்பங்கள் வீதிகளில் அலைந்து திரிவதை அவதானித்த புனர்வாழ்வுச்சபைச் செயலாளர் திரு. கே. நடராசா, அவர்களை கிளிநொச்சி அகதிகள் முகாமில் தற்காலிகமாகச் சேர்த்து அவர்களைக் குடியமர்த்துவதற்கான ஒழுங்குகளைச் செய்துள்ளார்.

தனியார் ஒருவரின் காணியில் இக் குடும்பங்களுக்கு ஏக்கர் காணி வீதம் வழங்குவதற்கும் சிறு வீடு மற்றும் வசதிகளும் உதவவும் காணிச் சொந்தக்காரர் இணங்கியுள்ளதாக திரு. நடராசா தெரிவித்தார். (அ)

---

(மாவிட்டபுரம்)

வசதிகள், சேவைகள் கட்டணத்தில் நியமனம் பெற்ற ஆசிரியர் சங்க அங்குரார்ப்பணக்கூட்டம் தெல்லிப்பழை யூனியன்ரிகல் லூரியில் நடைபெற்ற சமயம் பின்வருவோர் நிர்வாகிகளாகத் தெரிவாஞர்கள்.

தலைவர்: திரு. ஐ. திருச்செல்வம், உபதலைவர்: செல்வியோ சபாரத்தினம்செயலாளர்: செல்வி பு. பரமானந்தர், உபசெயலாளர்: திரு. கே. இரகுநாதன், பொருளாளர், செல்வி எஸ். கந்தையா. (அ)

சுசி
கலண்டர்கள்
டயறிகள்
பிளாஸ்டிக் டயறிகள்
மொத்தமாகவும் சில்லறையாகவும் கிடைக்கும்

வடபகுதி விநியோகஸ்தர்கள்
எஸ். பி சாமி அன் கொம்பனி
193, மின்சாரநிலைய வீதி, யாழ்ப்பாணம்.

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 4-30, 7-00,
9-30 p. m.
SEVEN SAMUARI

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
ஜெய்சங்கர்-லட்சுமி
கண்ணன் வருவான்

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
10-30, 2-30, 6-30, 9-45
முத்துராமன், சுந்தரராஜன், கே. ஆர். விஜயா
நடித்த
கே. பாலசந்தரின்
நாணல் [புதிய பிரதி]

வெலிங்டன் [யாழ். நகர்]
தினசரி 3 காட்சிகள்
தெய்வ மகன்

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்.நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

ஸ்ரீதர் (யாழ்ப்பாணம்)
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
எம். ஜி. ஆர். சரோஜாதேவி
நடித்த
தாயைக் காத்த தனயன்
(புதிய பிரதி)

ராணி [யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2.30, 6•00, 9.30.
சுஜாதா- விஜயகுமார் நடித்த
அவள் ஒரு தொடர்கதை
[புதிய பிரதி]

Regal (Jaffna)
"KRAKATOA" IS A STUNNER!
A Grand Adventure spectacle designed to knock you out.
It is Sensational. An artistic and technical triumph.
Adults may find themselves biting their nails.
Now running to packed houses in its
2nd Week 70 M. M.
"Krakatoa East of Java"
Cinerama wide screen! [Techni color]
Daily at 4-15 7-00 & 9-30 P. M. only
Sat, Sundays 10-30, A.M. 1-30 4-15 7-00 & 9-30P.m.

10-வது ஜனத்திரள் வாரம்!
ராஜா யாழ்நகர்
தினசரி 10-30, 2-15, 6-15, 9-45
ஜெமினி, ஜெயசித்திரா நடித்த
தசாவதாரம்
பாடசாலை மாணவர்கள் ஆசனங்களை பதிவுசெய்து கொள்ளவும்.

மனோஹரா (யாழ் நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
தென்னகத்தில் 100 நாட்களுக்கு மேல் ஓடியது
★ கமலஹாசன் ★ ரஜனிகாந்த்
★ எம். எஸ். விஸ்வநாத்
★ ஸ்ரீதேவி ★ ஒய். விஜயா
R. M. S. புரொடக்ஷன்ஸ் அளிக்கும்
மூன்று முடிச்சு
திரைக்கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

## திருநெல்வேலி மரம்நாட்டு விழா

[வண்ணார்பண்ணை]

திருநெல்வேலி கிராம விஸ்தரிப்புத் திட்டத்தில் இம்மாதம் 11ம் திகதி ஞாயிற்றுக்கிழமை மரம்நாட்டு விழா நடைபெறவிருக்கிறது.

திருநெல்வேலி கிராம விஸ்தரிப்புத் திட்ட அபிவிருத்திச் சங்கம் மில்க்வைற் ஸ்தாபனத்தின் உதவியுடன் இவ்விழாவை நடத்த ஏற்பாடு செய்துள்ளது.

நல்லூர் உதவி அரசாங்க அதிபர், மாவட்டக் காணி உத்தியோகத்தர், மில்க்வைற் ஸ்தாபன அதிபர் ஆகியோர் இவ்வைபவத்தை ஆரம்பித்து வைக்கவிருக்கின்றனர்.

இவ்வைபவத்திற்கு இலவசமாக மரங்கள் அன்பளிப்புச் செய்பவர்களுக்கும் மேற்படி சங்கம் அழைப்பு விடுத்துள்ளது. [அ]

## கிறிஸ்மஸ் விழா

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலைக் கிறிஸ்தவ மாணவர் சங்கத்தால் எதிர்வரும் திங்கள் மாலை 4-30 மணிக்கு "கிறிஸ்மஸ் விழா" கொண்டாடப்படவுள்ளது. கிறிஸ்து பிறப்பின் ஒளி விழாவாக அமைய இருக்கும் இவ்விழாவில் பல்வேறு கலைநிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

### புங்குடுதீவில்

புங்குடுதீவு மகாவித்தியாலய கிறிஸ்தவ மாணவர்கள் ஒன்று சேர்ந்து முதன் முறையாகப் பாடசாலையில் இன்று நத்தார் 'ஒளி விழா' கொண்டாடுகின்றனர். அதிபர் திரு. வி. நல்லதம்பியின் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் புரட்டஸ்தாந்து மதக் குருமாரும், கத்தோலிக்க மதக் குருமாரும் பிரதம அதிதியாகக் கலந்துகொள்வர். (கி-அ)

## ரூபா 28 ஆயிரம்

[2ம்பக்கத் தொடர்ச்சி]

நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

சங்கச்செயலாளர் திரு.தா. கணபதிப்பிள்ளை இக்கடன் வழங்கப்பட்டது குறித்து நிதி அமைச்சர் திரு.ரொனி டிமெல்லுக்கு நன்றி தெரிவித்துக் கடிதம் அனுப்பியுள்ளார். [க-அ]

## சுவிப்முடிவுகள்

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

| | |
|---|---|
| 01 R 0492 | 09 R 0324 |
| 32 R 0225 | 28 S 0162 |
| 29 S 0338 | 47 S 0473 |
| 48 S 0718 | 48 S 0782 |
| 01 T 0303 | 04 T 0517 |
| 14 T 0736 | 26 T 0542 |
| 37 T 0659 | 40 T 0865 |
| 60 T 0257 | 02 U 0318 |
| 06 U 0548 | 20 U 0035 |
| 29 U 0144 | 30 U 0353 |
| 11 V 0715 | 16 V 0695 |
| 17 V 0149 | 26 V 0242 |
| 31 V 0756 | 32 V 0962 |
| 34 V 0119 | 35 V 0940 |
| 55 V 0235 | 57 V 0525 |
| 16 W 0170 | 27 W 0812 |
| 31 W 0158 | 49 W 0212 |
| 07 X 0380 | 22 X 0411 |
| 42 X 0359 | 59 X 0173 |
| 18 Y 0448 | 25 Y 0391 |
| 36 Y 0239 | 54 Y 0968 |
| 55 Y 0561 | 58 Y 0652 |
| 01 Z 0286 | 07 Z 1000 |
| 51 Z 0773 | 58 Z 0236 |

(இவையாவும் உறுதிப்படுத்தப்பட வேண்டும்) (இ)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 2-30, 6-30, 9-30
சிவாஜி - சரோஜாதேவி
குலமகள் ராதை

றியோ [யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி - கே. ஆர். விஜயா
நடித்த
செல்வம் [புதிய பிரதி]

# காரைநகர் தீவைப்புவழக்கு ஏழு எதிரிகளும் விடுதலை

[வண்ணார்பண்ணை]

காரைநகர் தீவைப்பு வழக்கு ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது விசாரணை நடுவில் எதிரிகளான ஏழு பேரும் விடுதலைசெய்யப்பட்டனர். வழக்காளி தரப்புச் சாட்சிகளுக்கிடையே காணப்பட்ட முரண்பாடுகளைத் தொடர்ந்து ஊர்காவற்றுறை நீதிபதி திரு. வி. ஜெகசோதி எதிரிகளை விடுதலை செய்தார்.

இவ்வழக்கில் கடந்த ஏப்ரல் மாதம் 29 ந்தேதி காரைநகர் மாப்பான பூரியைச் சேர்ந்த இந்துமதி என்பவருக்குச் சொந்தமான வீட்டையும் கடையையும் தீ வைத்து 18000 ரூபாவுக்கு நஷ்டம் விளைவித்தாக இதே இடத்தைச் சேர்ந்த வே. சண்முகநாதன், நா. சொக்கலிங்கம், இ.பாஸ்கரன், ந. சிவலிங்கம் அ. சிவராசா, ந. கனகராசா என்பவர்களுக்கு எதிராக குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

வழக்காளி தரப்பில் சாட்சியமளித்த இந்துமதி விபச்சாரவிடுதி நடத்திய குற்றத்திற்காக கடந்த வருடம் இதே நீதிமன்றத்தில் தான் குற்றவாளியாக காணப்பட்டதாகவும், அபராதம் விதிக்கப்பட்டதாகவும் நன்னடத்தைப் பிணையில் விடப்பட்டதாகவும் ஒப்புக்கொண்டார்.

வழக்காளி தரப்பில் சட்டத்தரணி கே. வி. எஸ் சண்முகநாதன், சட்டத்தரணி எம். சண்முகநாதனின் அனுசரணையுடனும் ஊர்காவற்றுறை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எஸ். ரி. ஜெயக்குமாரின் உதவியுடனும் ஆஜரானார்.

1ம், 3ம், 4ம், 5ம், 6ம் எதிரிகளின் சார்பில் சட்டத்தரணி வி. என். நவரத்தினம் சட்டத்தரணிகள் ந. சிறிகாந்தா, கே. பி. எஸ். வரதராசா ஆகியோரின் அனுசரணையுடன் ஆஜரானார். 2ம், 7ம் எதிரிகள் சார்பில் சட்டத்தரணி ந. சிறிகாந்தா சட்டத்தரணி என். சுரேந்திரனின் அனுசரணையுடன் ஆஜரானார். [அ]

# வவனியாவில் 46பொலிசார் இடமாற்றம்

[வவனியா]

வவனியா பொலிஸ் அதிபரின்கீழ் இயங்கும் நான்கு பொலிஸ் நிலையங்களிலிருந்து 46 பொலிஸார் இடமாற்றம் பெற்றுள்ளனர்.

இவர்களுக்குப் பதிலாக 39 பொலிஸார் வெளிமாவட்டங்களிலிருந்து வவனியாப் பகுதிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

வவனியாப் பகுதியிலிருந்து 5 இன்ஸ்பெக்டர்களும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் பதிலாக 4 இன்ஸ்பெக்டர்கள் இடமாற்றம்பெற்று வவனியாவுக்கு வர இருக்கிறார்கள்.

வவனியா, முல்லைத்தீவு, மன்னார், கிளிநொச்சி முதலான பொலிஸ் நிலையங்களிலேயே இந்த இடமாற்றங்கள் நடந்துள்ளன. [அ]

# வவனியா ஆசிரியர்கள் இடமாற்றம் ரத்து

[வவனியா]

வவனியா மாவட்டத்திலிருந்து வெளிமாவட்டங்களுக்கும், மாவட்டத்திற்குள்ளேயும், நடைபெற்ற ஆசிரியர் இடமாற்றங்கள் அனைத்தும் இம்மாதம் 31ம் தேதிவரை பின்போடப்பட்டுள்ளது.

வவனியா எம். பி. திரு. தா. சிவசிதம்பரம் எடுத்த முயற்சியினாலேயே, இந்த இடமாற்றங்கள், பின்போடப்பட்டுள்ளது.

இந்த இடமாற்றங்களை இம்மாதம் 31ம் தேதிவரை, பின்போடுமாறு கல்வி அமைச்சு வவனியா மாவட்டக் கல்விஅதிகாரிக்கு உத்தரவிட்டுள்ளது.

வவனியா மாவட்ட மேலதிக பிரதம கல்வி அதிகாரி ஜனாப் எம். எம். செரிப், மன்னாருக்கும், மன்னார் பிரதம கல்விஅதிகாரி திரு. கருணரத்ன, வவனியாவிற்கும் இடமாற்றம் செய்யப்பட்டிருந்தனர். இந்த இரு இடமாற்றங்களும் கல்விஅமைச்சினால் நிறுத்தப்பட்டுள்ளது. [க-அ]

## துப்பாக்கிக்கு வாலிபர் பலி!

### வவனியாவில் சம்பவம்

[வவனியா]

வவனியா கொக்குவெளிக் கிராமத்தில் நடந்த துப்பாக்கிச் சூட்டுக்கு காந்தகே சூரியா என்ற 18 வயது வாலிபர் பலியானார்.

சந்தேகத்தின்பேரில் அவருடன்கூடச் சென்ற எஸ் சோமபாலாவும், மகிந்த பொடிமாத்தய, குருசாமி கறுப்பையா, இராமச்சந்திரன் ஆகியோரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இறந்தவர் படம்பார்த்துவிட்டு வீடுதிரும்பிக்கொண்டிருந்தபோது, இச்சம்பவம் நடந்ததாகவும், கூடச்சென்ற எஸ் சோமபாலாவுக்குஎவ்வித காயமும் ஏற்படவில்லையென்றும், விசாரணையில் தெரியவந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பாக வவனியா குற்றத் தடுப்புப் பிரிவு இன்ஸ்பெக்டர் . எஸ். ஜ. மந்துகுமார, சார்ஜன்ட் துரைராஜா ஆகியோர் விசாரணை நடத்திவருகின்றனர். [க-அ]

## சீவல் தொழிலாளர் வேலை நிறுத்தம்

[எழுதுமட்டுவாள்]

தென்மராட்சிகிழக்கு தென்னை பனம் பொருள் உற்பத்தி கூட்டுறவுச் சங்க 215வது கிளையான எழுதுமட்டுவாள் கிளை சீவல் தொழிலாளர் வேலை நிறுத்தம் செய்துள்ளனர்.

சீவல் தொழிலாளர் பலருக்குப் பனைமர வரிப்பணம், சங்க முகாமைப் பகுதியினால் வழங்கப்படாததே, இந்த வேலை நிறுத்தத்திற்குக் காரணம் எனக் கூறப்படுகிறது.

இவ்விஷயமாகச் சீவல் தொழிலாளர், பல தடவை முகாமைப் பகுதிக்கு முறைப்பாடு செய்ததாகவும் கூறப்படுகிறது. ...... [க அ]

## தளவாட சேதத்திற்கு ரூ. 4000

[வவனியா]

அகதிகள் முகாமாகப் பாவிக்கப்பட்ட வவனியா சைவப்பிரகாச வித்தியாசாலைக்கு 4000 ரூபா வழங்கப்பட்டுள்ளது.

இவ்வித்தியாசாலையில், தளவாடங்களுக்கு ஏற்பட்ட சேதங்களுக்காகவே இப்பணம் வழங்கப்பட்டுள்ளது.

இத்தொகை, மாவட்ட வரவுசெலவு திட்டத்தின்கீழ், அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்டுள்ளது.

தளவாடங்கள் சேதமடைந்துவிட்டதால்; மாணவர்கள் தரையிலிருந்து படித்துவருவதாக வித்தியாலய அதிபர் திரு. கனகரத்தினம் கூறினார். [க-அ]

### மணிவாக்கு

எல்லார் கால்களிலும் உள்ள தூசிக்கிளையாகத் தன்னைத்தாழ்த்தி ஒழுகிக் கொள்பவர் கடவுளுக்கண்மையிலுள்ளவர்.

—காந்திமகான்

ஈழநாடு
The Eelanaadu

## கைவிடும் காலம் வந்தால்!

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் தேசியஅரசுப் பேரவைக்கு வந்து தமது பணியைச் சிறப்பாக நிறைவேற்றுகிருர்கள் என்று பிரதமர் ஜே. ஆர். ஜயவர்த்தன பேரவையில் பாராட்டுத் தெரிவித்திருக்கிருர்.

''தட்டுங்கள் திறக்கப்படும்; கேளுங்கள் கொடுக்கப்படும்; தேடுங்கள் கிடைக்கும் என்ருர் யேசுபிரான்.

இதைத் தமிழர்விடுதலைக் கூட்டணியினர் சரியாகச் செய்துவந்துள்ளனர் என்பதையே பிரதமர் ஜே. ஆரின் பாராட்டுரை குறிப்பிடுகிறதென்று சொல்லலாம்.

பழைய சரித்திரங்களைப் பற்றி மீண்டும் கிளறவேண்டியதில்லை. ஆனல் தமிழர் கூட்டணி என்ற அமைப்பு உருவாகிய பின்னர் தமிழர் பிரச்னைகள் பற்றி அது எடுத்துக் கூறியவைகளுக்கு ஒரு காத்திரம் இருக்கத்தான் செய்தது.

''மொழிப் பிரச்னையே முடிந்துவிட்டது; தமிழர் பிரச்னை என்று ஒன்று கிடையாது'' என்று ஆட்சிபீடத்துக்கு வந்த அரசாங்கங்களும் அவற்றில் அங்கம் வகித்த அமைச்சர்களும் கூறிவந்தனர்

இந்த அரசாங்கங்களுடன் இணைந்திருந்த தமிழர்கள் கூடத் தமிழர் பிரச்னை என ஒன்று இல்லைஎன்றே கூறிவந்தனர்.

தமிழர் விடுதலைக் கூட்டணி என்ற ஒன்று தமிழ் மக்களுக்குப் பிரச்னைகள் இருக்கின்றன என்பதை அவ்வப்போது எடுத்துக் கூறிவந்ததால் கடைசிநேரத்தில் ''தமிழர் பிரச்னைகள் இருக்கத்தான் செய்கின்றன; பேச்சுவார்த்தைகள் மூலம் அவற்றுக்குத் தீர்வு காண்போம்'' என்று கூறி அதற்கான முயற்சிகளிலும் ஈடுபடத் தொடங்கின.

இன்று ஆட்சிபீடத்துக்கு வந்துள்ள திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவைத் தலைவராகக்கொண்ட ஐக்கிய தேசியக் கட்சி தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் சர்வகட்சி மாநாடு கூட்டித் தமிழர் பிரச்னைக்குத் தீர்வு காணப்போவதாகத் தெரிவித்திருந்தது.

இத்தகைய மாநாட்டினுல் பிரயோசனம் இல்லையென்பதை உணர்ந்து அனுபவசாலியான பிரதமர் அரசமைப்புச் சட்டத்தில் திருத்தம் செய்வதற்கு நியமிக்கப்பட்டுள்ள பேரவைத் தெரிவுக்குழுவில் தமிழர் விடுதலைக்கூட்டணியினர் இடம்பெருவிட்டாலும் தமிழ்மக்களுக்கு நீதியும் நியாயமும் அரசமைப்புரீதியாக வழங்குவதாகத் தெரிவித்துள்ளது அவரது ஆற்றலையும் அனுபவத்தையுமே காட்டுகின்றது.

அரசமைப்புத் தெரிவுக்குழுவில் தமிழர்விடுதலைக் கூட்டணியினர் கலந்துகொள்ளாததற்கு என்ன காரணங்களிலிருந்தாலும் பிரதமர் ஜே. ஆர் ''நீதியும் நியாயமும் வழங்குவேன்'' என்று உறுதியாகக் கூறியபின் அவர்கள் கலந்துகொண்டால் ''நாட்டைப் பிரித்துவிட்டார் அல்லது தமிழருக்கு நாட்டை விற்றுவிட்டார்'' என்று மாற்றுக் கட்சியினர் பிரச்னையைக் கிளப்பி வகுப்புவாதத்தைத் தூண்டுவதற்கே இடமளிக்கும்.

இந்த வகையில் கூட்டணியினர் ஒதுங்கிருப்பது நல்லதே!

தமிழர் விடுதலைக் கூட்டணியினர் சொல்வதெல்லாம் சரியானதோ செய்வதெல்லாம் நியாயமானதே என்று யாரும் ஏற்றுக்கொள்ளமாட்டார்கள்; கூட்டணியில் உள்ளவர்கள் கூட இதை ஒப்புக்கொள்ளவும்மாட்டார்கள்.

ஜனநாயக ரீதியிலமைந்த அரசாங்கத்தை, ஜனநாயக முறைக்கு மாருகக் கவிழ்க்க முயற்சிக்கும் அரசியல் நடவடிக்கை எதற்கும் இடம் அளிக்கமுடியாதென்று பிரதமர் அறிவித்திருக்கிருர்.

இதில் யாரும் தவறு சொல்லமுடியாது. இந்த வகையில் அரசியல் ரீதியான வேலைநிறுத்தங்கள், கிளர்ச்சிகளுக்குத் தடை விதிக்கப்படவிருக்கிறது. பிரிவினையைத் தூண்டுவோருக்கு எதிராகவும் நடவடிக்கை எடுக்கப்படவிருக்கிறதென்று செய்திகள் தெரிவிக்கின்றன.

தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவர்கள் பல தடவைகளிலும் பேரவையிலுங்கூட ''நாம் பிரிவினைகோரவில்லை; முன்னைய தமிழ் ஈழம் தான் கோருகிருேம். அதுவும் எமக்கு எதிராகபாரபட்சம் காட்டப்பட்டதால் அந்தநிலைக்குத் தள்ளப் பட்டுவிட்டோம்'' என்றுதான் கூறியிருக்கிருர்கள்.

ஆட்சிபீடத்தில் அமர்ந்த அரசுக்கு எதிராகத் தமிழர் கூட்டணியினர் சதி முயற்சியிலோ, புரட்சியிலோ ஈடுபடவில்லை!

நியாயம் கிடைக்காததால் தமிழ் ஈழக் கோரிக்கைக்குத் தள்ளப்பட்டவர்கள்!

தமிழ் மக்கள், சுயநிர்ணய உரிமையுடன் இந்நாட்டில் சுதந்திரமாக மற்றையவர்களுடன் சமத்துவமாக வாழவழிகிடைத்தால், பிரிவினைப் பேச்சுக்கே இடமில்லாமற்போகலாம்.

திராவிட நாடு கோரிய அறிஞர் அண்ணு, அதைக் காலமறிந்து கைவிட்டது போல், தமிழர் விடுதலைக் கூட்டணியினரும் வட்டுக் கோட்டைத் தீர்மானத்தைக் கைவிடும் காலத்தைப் புதிய அரசு நிறைவேற்றினுல் அதில் என்ன தவறு?

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1977-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 8-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389 Registered as News paper in Sri lanka.

## இராமகிருஷ்ண...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

இராமகிருஷ்ணமடத்தை திருப்பிக்கொடுக்கவேண்டும் என்று கேட்டுக்கொண்டார். இதற்கு உள்ளூராட்சி அமைச்சர் திரு. பிரேமதாச பதிலளிக்கையில்; இந்த விவகாரம் வெகுதூரத்திற்குச் சென்றுவிட்டது என்றும், கட்டிடத்துக்கு நஷ்டஈடு வழங்கப்பட்டதுடன் வேறு காணியும் கொடுக்கப்பட்டுள்ளது என்றும் கூறினர். அமைச்சர் இப்படிக் கூறிய போதிலும் நல்லூர் எம். பி; ''இதுபற்றி மறுபரிசீலனை செய்யுங்கள்'' என்று கேட்டுக்கொண்டார். (ம)

# மகன் கொலை! தாயார் கைது!!

(பொத்துவில்)

தாயாரின் விருப்பத்திற்கு விரோதமாக அவர் பற்றிய தகவல் ஒன்றைக் கூறியதைத் தொடர்ந்து அவரின் 12 வயது மகன் ஒருவன் கற்களாலும் கைகளாலும் அடித்துச் கொலை செய்யப்பட்ட சம்பவம் பொத்துவிலில் இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இச்சிறுவன் பொத்துவில் பஸ் நிலையத்தில் நின்றதாகவும், அச்சிறுவனுக்கும் அவனது தாயாருக்குமிடையே ஏற்பட்ட வாக்குவாதத்தை அடுத்து தாயார் அச்சிறுவனை நாதன் என்பவர் வீட்டுக்கு இழுத்துச்சென்றதாகவும், இதைத் தொடர்ந்து நாதன் என்பவர் அச்சிறுவனை கைகளாலும் கற்களாலும் தாக்கினுர் என்றும் இதைத் தொடர்ந்து சிறுவனின் உயிர் பிரிந்தது என்றும் விசாரணையிலிருந்து தெரியவந்துள்ளது.

முதலாவது சந்தேக நபரான தாயார் திருமதி அலியா சின்னப்பு உம்மா பொலிசாரால் கைது செய்யப்பட்டு காவலில் வைக்கப்பட்டுள்ளார். இரண்டாவது சந்தேக நபரான நாதன் தலைமறைவாகிவிட்டார். (இ)

### யாழ். காப்புறுதி கூட்டுத்தாபன

## புதிய அலுவலகதிறப்புவிழா

(யாழ்ப்பாணம்)

''பதினைந்து வருடங்களுக்கு மேலாக யாழ்நகரில் அளப்பெரிய சேவை செய்துவரும் காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் புதிய அலுவலகம் 19-ந் திகதி திங்கட்கிழமை காலை 10 மணிக்கு யாழ்ப்பாணத் தொகுதி தேசிய பேரவை உறுப்பினர் திரு. வெற்றிவேலு யோகேஸ்வரனுல் திறந்து வைக்கப்படும். இவ்வைபவத்தில் வர்த்தக அமைச்சர் திரு. அத்துலத் முதலி பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். இலங்கை பூராவுமுள்ள காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தின் 30 கிளைகளில் 2-வது சொந்தக் கட்டிடத்திலமையும் கிளை என்னும் பெருமை இக்கிளைக்குக் கிட்டுகிறது.

காப்புறுதி கூட்டுத்தாபன யாழ் கிளையில் நேற்று நடைபெற்ற பத்திரிகையாளர் மகாநாட்டில் கிளை முகாமையாளர் திரு. சி. கீர்த்திசிங்கம் மேற்கண்ட தகவலை வெளியிட...

''1962இல் .. காப்புறுதிக் கூட்டுத்தாபனம் அரசுடைமையாக்கப்படுகையில் மக்களிடையே வெளிநாட்டுக்கம்பனிகள் வழங்கிய அளவு சேவையை இந்நிறுவனம் வழங்குமா என்னும் ஐயம் இருந்தது. இந்நிறுவனம் மக்கள் தேவைக்கேற்ற முறையில் திட்டங்களை வகுத்து இயங்கி அந்த ஐயத்தை போக்கியது மட்டுமல்லாமல் பிரமாண்டமான வளர்ச்சியையும் பெற்றுள்ளது. யாழ்ப்பாணத்தில் பல கோடி ரூபாவை இந்நிறுவனம் நட்டஈடாக வழங்கியுள்ளது. இந்நிறுவனத்தின் வளர்ச்சியில் ஒரு மைல் கல்லாக புதிய அலுவலகம் சொந்தக் கட்டிடத்திலேயே அமைகிறது. என்றும் அவர் கூறினுர்

திரு. திருஞானசுந்தரமும் திரு. சி. கீர்த்திசிங்கமும் புதிய கட்டிடத் திறப்புவிழா வுக்கால - ஒழுங்குகளுக்குப் பொறுப்பாக இருந்து பணியாற்றி வருகின்றனர். (கி)

# கிராம வங்கியில்

## ஆயுதமுனையில் கொள்ளை

[கொழும்பு]

ஆயுதம் தாங்கிய இளைஞர்கள் மலபே விவசாய நிலையத்தில் உள்ள கிராமவங்கியில் துப்பாக்கிமுனையில் பணத்தைக் கொள்ளையடித்துச் சென்றுள்ள சம்பவம் ஒன்று நேற்று முன்தினம் நிகழ்ந்துள்ளது.

நேற்று முன்தினம் பகல் 12-45 மணியளவில் திடீரென அந்தக் கிராமியவங்கிக்குள் நுழைந்த 8 இளைஞர்களும் அங்குள்ள ஊழியர்களை ஆயுத முனையில் பயமுறுத்தி அங்கிருந்த 12 ஆயிரத்து 298 ரூபாவைக் கொள்ளையடித்துச் சென்றனராம்.

இக்கொள்ளை தொடர்பாக அத்துறுகிரிய பொலிசார் விசாரணை செய்து வருகின்றனர். (a)

## மரண அறிவித்தல்

### M. S. அப்துல்ஹமீது

(முன்னுள் சுன்னுகம் பிரபல வியாபாரி)

இவர் இஜமீலாவின் அருமைக்கணவரும், நஸீன், ஹமீம் (அதிபர், ஒஸ்மானியாக்கல்லூரி, யாழ்ப்பாணம்) பாறூக், மஃறூப் (விரிவுரையாளர், பல் தொழில்நுட்ப நிறுவனம், யாழ்ப்பாணம்), தாஸீம் (அதிபர் நாச்சியாதுவ, முஸ்லிம் மகாவித்தியாலயம்), பதுறுஸ்ஸமான் (பலநோக்குக் கூட்டுறவுச்சங்கம், யாழ்ப்பாணம்), சம்சுன்னஹார், சமூனுபேகம் ஆகியோரின் தந்தையும், கிளிநொச்சி மாவட்ட காணி அதிகாரி மக்பூல் அவர்களின் மாமனுரும், காலஞ்சென்ற முகம்மது முகியிதீன், முகியிதீன் அப்துல்காதர் ஆகியோரின் தம்பியும் ஹாஜி அபூபக்கர் அவர்களின் மருமகனுமாவார்; அன்னரின் ஜனுஸா 9-12-77 வெள்ளிக்கிழமை பிற்பகல் 4-30 மணிக்கு, 23, கலிபா அப்துல் ஹமீது வீதியில் உள்ள அவர்களது இல்லத்தில் இருந்து சின்னப்பள்ளிவாசல் மையவாடிக்கு நல்லடக்கத்திற்காக எடுத்துச்செல்லப்படும்.

7880

## தொகுப்புரை

பொலநறுவ பொலிஸ் நிலையக் கொலை வழக்கில், எதிரிகள் தரப்புச் சட்டத்தரணி ஜி ஜி பொன்னம்பலம் [ஜூனியர்] இரண்டாவது தினமாகத் தொகுப்புரை நிகழ்த்தினுர்.

இவ்வழக்கு குருநாகல் மேல் நீதிமன்றத்தில் நீதிபதி அபயவர்த்தன முன்னிலையில் நடைபெற்று வருகிறது.

இவ்வழக்சில், 76ம் ஆண்டு மே மாதம் 11ம் தேதி டொன் மார்ட்டின் றணசிங்கா என்பவரைக் கொலைசெய்ததாகப் பொலநறுவ சப்இன்ஸ்பெக்டர் ராஜபக்ச, சார்ஜன்ட் கிரிபண்டா, கன்ஸ்டபிள் கே ஏ பந்துசேன, ஜீப்சாரதி கருணதிலகா ஆகியோர் மீது குற்றம் சாட்டப்பட்டுள்ளது. [கை]

## பரீட்சை நிலையங்கள்

வடமாகாணத்தில் கல்விப் பகுதியினரால் வழங்கப்பட்ட இரண்டு க பொ. த. [சாதாரணம்] பரீட்சை நிலையங்கள் மாற்றம்செய்யப்பட்டுள்ளதாக வடமாநில கல்விப் பணிப்பாளர் திரு. வி. மாணிக்கவாசகர் தெரிவித்துள்ளார்.

கல்விப்பகுதி ஆணையாளரின் அறிவித்தலின்படி இம் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார்.

இதன்படி, கிளிநொச்சி சிங்கள மகாவித்தியாலய பரீட்சைநிலையம், கிளிநொச்சி மகாவித்தியாலய 2-ம் கட்டிடத்துக்கும் வண்ணர்பண்ணை நாவலர் வித்தியாலய பரீட்சைநிலையம் யாழ். சிங்கள மகாவித்தியாலயத்துக்கும் மாற்றப்பட்டுள்ளன. (கெ)

## காணி அமைச்சர்...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

திருத்தச்சட்டம் வந்த அடுத்த நாள் (1972 ஆகஸ்ட் 18) நிகழ்ந்துள்ளது'' என்று அமைச்சர் திரு. ஈ. எல். சேனநாயக்கா உரிமைப்பிரச்னையைக் கிளப்பினுர்.

இதற்கு சபாநாயகர் பதிலளிக்கையில், பத்திரிகையில் அத்தனகல எம். பி.யின் அறிக்கை வெளியானதன் மூலம் உரிமைப்பிரச்னை எழ நியாயமில்லை என்றும், இது கௌரவ பேரவை உறுப்பினரைப் பாதிப்பதாகவும் இல்லை என்றும் ஆனுல் 'தினகர' ப்த்திரிகையில் வெளிவந்த செய்தி கூட்டியோ குறைத்தோ வெளியிடப்பட்டதா என்பது பற்றி பிறிதொரு திகதியில் தாம் தீர்ப்பளிப்பதாகவும் கூறினுர். (ம)

## ஊழல்......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஒரு கட்டத்தில் நிதிஅமைச்சர், பேசுகையில், கூட்டுஸ்தாபனத் தலைவர்கள் அதிக அளவு சம்பளம்; பெறுவது சம்பந்தமாக தாம் முன்னர் ஒரு தடவை இப் பேரவையில் பேசுகையில், பெட்ரோலியக் கூட்டுத்தாபனத் தலைவர் திரு. ஈ. ஆர். எஸ். ஆர். குமாரசாமி பெருமளவு சம்பளம் பெறுகின்ருர் என்று கூறியதாகவும், ஆனுல் இத் தகவல் பிழையானது என்றும் இதற்காக தாம் மன்னிப்புக் கேட்பதாகவும் தெரிவித்தார்.

இன்னுமொரு சந்தர்ப்பத்தில் ஐம்பது ரூபா சம்பள உயர்வு பற்றிக் குறிப்பிடுகையில், இந்தச் சம்பளஉயர்வு தனியார்துறையினருக்கும் வழங்கப்படும் என்றும், இதற்கான சட்டங்கள் தயாராகின்றன என்றும் தெரிவித்தார்; (ம)

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

கள் இதுவரை சிங்களத் தேர்ச்சிப் பரீட்சை எதுவும் சித்தியடையாத காரணத்தினுல் வேலைநீக்க அறிவித்தல் வழங்கப்பட்டுள்ளது.

வேலைநீக்க அறிவித்தல் வழங்கப்பட்டவர்களில் பலர் பத்து வருடங்களுக்கு மேல் சேவையாற்றியவர்களாவர். சிலர் 20 வருடங்கள் சேவையாற்றியுள்ளனர்.